“செயல்படாத அமைச்சர் – இல்லாத செயலாளர்” என திண்டாடும்

வேளாண்மைத் துறைக்கு செயலாளர் நியமனம் எப்போது?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக். 7-

“விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. ஆட்சியில், வேளாண்மைத் துறைச் செயலாளர் நியமனம் எப்போது?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைச் செயலாளராக இருந்த சங்கர் ஐ.ஏ.எஸ். அவர்கள், தொல்லியல் ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகப் போகிறது. ஆனால், இப்போது வரை வேளாண் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் புதிய செயலாளர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது, உழவர் பெருமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்ட வேளாண் துறை போன்ற ஒரு முக்கியத் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் செயலாளர்கூட இல்லாமல் இருப்பதை



என்ன காரணம் சொல்லி இவர்களால் நியாயப்படுத்த முடியும்?

வேறு வேலைகளில் மும்முரம் காட்டும் முதல்வர்!

பருவமழை தொடங்கவுள்ள நேரத்தில், வேளாண்மைத் துறைக்கு நிலையான நிர்வாகத் தலைமையும், துரிதமான ஒருங்கிணைப்பும் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய முடிவுகள் தாமதமின்றி எடுக்கப்படுவதற்கும், மாவட்ட அளவிலான பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் இது அவசியமானது. இதனைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய, துறை அமைச்சரும் முதலமைச்சரும் ‘வேறு வேலைகளில்’தான் மும்முரம் காட்டுகின்றனர்.

த.வெ.க. ஆட்சிக்கு வந்த துமே, பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி செய்தார்கள். இயற்கையால் குறுவை பொய்த்து, த.வெ.க. அரசின் சிந்தனையற்ற செயல்பாட்டால் சம்பா சாகுபடியும் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. இப்படித் தொடர் ஏமாற்றங்களால் விரக்தியில் உள்ள விவசாயப் பெருமக்கள், தமிழ்நாடெங்கும் போராடிவருகின்றனர்.

நேற்றுகூட, கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், முத்துப்பேட்டையில் விவசாயிகள் சாலை மறியல் செய்துள்ளனர். தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகள் வீராணம் ஏரியில் இறங்கிப் போராட்டம் நடத்தியுள்ளனர். தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பயிர்க் கடனை முழுமையாகத் தள்ளுபடிசெய்ய வலியுறுத்தி, சென்னையில் வருகிற 14-ஆம் தேதி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாகத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.


செயல்படாத அமைச்சர்!

இத்தகைய சூழலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கு அனுபவம் வாய்ந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டு, உழவர்களின் துயர் துடைப்பதற்கான பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், அந்தத் துறையைப் பொறுப்பு ஏற்பாட்டில் விட்டிருப்பது, வேளாண்குடிப் பெருமக்களின் நலனில் இந்த அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது. ‘செயல்படாத அமைச்சர், இல்லாத செயலாளர்’ எனத் த.வெ.க. ஆட்சியைப் போலவே வேளாண் துறையும் திண்டாடுகிறது.

உலகுக்கே உணவளிக்கும் உழவைக் காப்பாற்றுவதில் இனியும் காலதாமதம் செய்யாமல், புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தூங்கு மூஞ்சி த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; செம்மஞ்சேரியிலே வர இருந்த ‘மெகா ஸ்போர்ட்ஸ் சிட்டி’ திட்டத்தை காரணமே இல்லாம த.வெ.க. அரசு ரத்து செய்தது. அதை இப்ப தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் போறாங்களாமே கேள்விப்பட்டியா?

போண்டி : **ஆமாய்யா! பேப்பர்ல படிச்சேன். இன்னொன்னு தெரியுமா? அந்த தனியார் நிறுவனம் அமைச்சர் ஒருவருக்கு தொடர்புள்ள நிறுவனமாம். அதே பேப்பர்லதான் அதுவும் வந்திருக்கு, முதலமைச்சர் விஜய்க்கு இது தெரியாமலா இருக்கும்.**

தி.மு.க.வின் கோட்டைகளை குறிவைத்த SIR?

புள்ளிவிவர ஆதாரங்களுடன் ‘தி இந்து பிஸினஸ்லைன்’ பரபரப்புத் தகவல்... முதல் பக்கத் தொடர்ச்சி

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை இந்தியாவின் கலாச்சார சமூக அமைப்பை முழுமையாக மாற்றியமைக்க போவதாகவும், SIR மூலம் நீக்கப்பட்டவர்களில் பெரும்பாலோனோர் இஸ்லாமியர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

தி.மு.க.வாக்காளர்கள் குறிவைத்து நீக்கம்!

இதேபோன்று, வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம், தி.மு.க. வாக்காளர்கள் குறிவைக்கப்பட்டு நீக்கப்பட்டதாகவும், இது தலைமை தேர்தல் ஆணையத்தின் ஒரு முழுமையான சதி என்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சன் ஏற்கனவே கூறி இருந்ததும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக வென்ற தொகுதிகளில் தான் சராசரியாக அதிகபட்சமாக 31,000 வாக்காளர்களின் பெயர்கள் SIR மூலம் நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிமுக 2021ல் வெற்றி பெற்ற தொகுதிகளில் சராசரியாக 27,000 வாக்காளர்கள் மட்டுமே நீக்கப்பட்டிருக்கின்றனர்.

சாதாரணமாக பார்த்தால் இரண்டுக்கும் இடையில் வெறும் 4,000 வாக்குகள் தானே வித்தியாசம் என்று தோன்றலாம். ஆனால் பல தொகுதிகளில் இந்த எண்ணிக்கைதான் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் எண்ணிக்கையாக இருந்திருக்கிறது.

32 தொகுதிகள் தி.மு.க.வுக்கு இழப்பு!

உதாரணத்திற்கு திருப்பத்தூரை எடுத்துக்கொள்ளுங்கள். இங்கு வெறும் 1 வாக்கு வித்தியாசத்தில் திமுகவின் மூத்த அமைச்சராக இருந்த பெரியகருப்பன் தோற்கடிக்கப்பட்டார். வேப்பனஹள்ளியில் 138 வாக்குகள், கன்னியாகுமரியில்

> **“சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் நீக்கங்கள், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை மாற்றியமைத்திருப்பது புள்ளி விபர ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.”**

214 வாக்குகள், போளூரில் 227 வாக்குகள், திருக்கோவிலூரில் 285 வாக்குகள், பரமத்தி வேலூரில் 308 வாக்குகள், குளித்தலையில் 579 வாக்குகள், கும்பகோணத்தில் 679 வாக்குகள், பழனியில் 693 வாக்குகள் என.. மொத்தம் 32 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறது.

சாதாரண ஏழை எளிய மக்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் விளிம்புநிலை மக்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் அனைவரும் காலங்காலமாக திமுகவின் அசைக்க முடியாக வாக்கு வங்கியாக இருந்தார்கள் என்றும் தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

மறுபுறம் காங்கிரஸ் இந்த விஷயத்தில் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. அதாவது தேசிய அளவில் ராகுல் காந்தி வாக்கு திருட்டு குறித்து காட்டுகத்து கத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் வாக்கு திருட்டு எந்த அளவுக்கு நடந்தது என்பதை எதிர்க்கட்சிகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்று திமுக மீது கையை காட்டி சைலாக ப.சிதம்பரம் நகர்ந்து கொண்டார்.

எது எப்படி இருப்பினும், தி.மு.க.வின் கோட்டைகளை குறி வைத்து வாக்காளர்கள் அதிக அளவில் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கு தேர்தல் ஆணையம் உரிய பதில் அளிக்க வேண்டும் என்று பலரும் கூறி வருகின்றனர்.

SIR விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக்கக்கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில் the hindu businessline வெளியிட்டுள்ள இக்கட்டுரை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

த.வெ.க.வுக்கு வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம்தான்!

சாதகமா என்னென்ன அம்சங்கள் இருக்கும்?

எல்லா அம்சங்களுமே எங்களுக்கு சாதனமாக தான் இருக்கு, அவங்க எதுவுமே பண்ணலையே. கடந்த 3 மாத காலமாக தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், லாக்கப் மரணங்கள் தான் அதிக அளவில் நடந்து உள்ளது. விலைவாசி உயர்வு, கரண்ட் கட்டண உயர்வு தான் சாதனையாக உள்ளது. கடந்த 2021ல் நடைபெற்ற எங்களோட திராவிடம் மாடல் ஆட்சியின் 100 நாள் சாதனை திட்டங்களையும் பாருங்க. இப்ப அவங்க உங்க ஆட்சியில் நடைபெற்றுள்ள 100 நாள் திட்டங்களையும் பாருங்க. எதுவுமே இல்லை. மீண்டும் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி வந்துவிடாதா என்கிற எதிர்பார்ப்பு மக்கள் இடையே வந்துருச்சு.

ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா பண்ணிவிட்டு தான் இப்ப த.வெ.க.வில் வேட்பாளராக ஆயிருக்காங்க, அவங்களுக்கு எந்த அளவுக்கு வரவேற்பு இங்க இருக்கும்னு நினைக்கிறீங்க? ஆல்ரெடி நீங்களே சோசியல் மீடியால பார்த்திருப்பீங்க. எல்லா பக்கமும் புறக்கணிச்சிட்டு தானே இருக்காங்க. முதலமைச்சர் அதிக அளவு இங்க ஸ்பென் பண்ணி பிரச்சாரம் பண்ணிருக்காங்க. முதல மைச்சரை நிறுத்தி பேசுற அளவுக்கு வந்து ஒரு பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது எங்களுக்கு மிகப்பெரிய வெற்றி தான் இவ்வாறு செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

மின்சாரம் தடையின்றிக் கிடைப்பது எப்போது?

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குதான் வெற்றி கிடைக்கும்!

வாக்களித்தபின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா பேட்டி!

தாராபுரம், அக். 7–

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தான் வெற்றி நிச்சயம் என்று தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா செய்தியாளர்களிடம் கூறினார்!

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா நேற்று (06.10.2026) காலை 7.00 மணியளவில் தளவாய் பட்டினம் புரட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது :–

தி.மு.க.வின் வெற்றி உறுதி குறித்த ஆதரவாளரின் கருத்துகள்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர், வழக்கறிஞர் எஸ். சுகன்யா எனும் நான் என்னுடைய சொந்த ஊரான தளவாய்பட்டினத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் முதல் நபராக நான் எனது ஜனநாயக கடமையை வெற்றிகரமாக தொடங்கி வச்சிருக்கேன். எங்கள் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி நிச்சயம்.

இங்கே பாதுகாப்பு எல்லாம் எப்படி இருக்கு?

நல்லா இருக்கு, நான் இங்கு உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் உள்ளே சென்று ஆய்வு செய்தேன், பொதுமக்கள் அனைவரும் பொறுமையுடனும், எழுச்சியுடனும் அமைதியான முறையில் வாக்களித்து வருகின்றனர்.

ஐந்து முனைப் போட்டி பெரிய சவாலா இருக்கும்னு நினைக்கிறீங்களா?

அப்படி எல்லாம் இல்லை, வெற்றி கண்டிப்பா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தான்.

வெற்றிக்கு அடிப்படை காரணமா எது இருக்கும்னு நினைக்கிறீங்க?

தமிழகத்தில் கடந்த மூன்று மாத காலமாக நடந்த ஏமாற்றம் தான் மக்களோட மாற்றமா இருக்கும். ஆட்சி மாற்றம் தேவை என்று வாக்களித்த அனைத்து மக்களும் இன்று ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுவே திராவிட முன்னேற்றக் கழற்றி வெற்றிக்கு காரணமாக இருக்கும்.

தி.மு.க. தலைவர்களோட பிரச்சாரம் உங்களுக்கு எந்த அளவுக்கு வலு சேர்த்திருக்கும்னு நினைக்கிறீங்க?



கழகத் தலைவர், எந்நாளும் எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழுத்தலைவர் கவிஞர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களின் பிரச்சாரங்கள் பொது மக்களிடையே நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. கழகத் தலைவர் அவர்களின் “ரோடு ஷோ” பொதுமக்களிடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு பெரிதும் வலு சேர்த்திருக்கிறது.

தி.மு.கழகத்தினை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதற்காக இடைத்தேர்தல் பொறுப்பாளர்களாக தலைமைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் ஏற்பாட்டில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ. இராசா உள்பட மாவட்டக் கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, வட்டக் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும்

இரவு, பகல் பாராமல் எவ்வளவு தூரம் ஹார்ட் வொர்க் பண்ண முடியுமோ அவ்வளவு தூரம் பண்ணிருக்காங்க. அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் தொடரும் மின்வெட்டு! மக்கள் கடும் அவதி!

“கட்டணம் மட்டும் சரியான நேரத்தில் வருகிறது” என மக்கள் விமர்சனம்!

சென்னை, அக்.7 - தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் மின்தடை மற்றும் திடீர் மின்வெட்டு ஏற்படுவதால் பொதுமக்கள், வணிகர்கள், விவசாயிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மின் வழித்தட கோளாறு, மின்மாற்றி பழுது, பராமரிப்பு பணிகள் உள்ளிட்ட காரணங்களால் சில இடங்களில் திட்டமிட்டும், பல பகுதிகளில் திடீரெனவும் மின்விநியோகம் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு நிரந்தர தீர்வு காண்பது எப்போது என பொதுமக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

திருவொற்றியூர் பகுதியில் மின் வெட்டு!

சென்னையில் சில பகுதிகளில் புதிய ‘ரிங் மெயின் யூனிட்’ அமைக்கும் பணிக்காக காலை 10.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை மின்விநியோகம் நிறுத்தப் பட்டது. பெரம்பூர் பகுதியில் சீம்பியம் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் இருந்து மின்சாரம் பெறும் மின் வழித்தடம் அதிகாலை 3 மணியளவில் ‘டிரிப்’ ஆனதால் மின்தடை ஏற்பட்டது. சுமார் 3 மணி நேரத்துக்கு பிறகு மின்விநியோகம் சீரானது. எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் மின்வழித்தடு கோளாறு காரணமாக பகல் முழுவதும் மின் தடை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. நீலாங்கரை பகுதியில் சரஸ்வதி நகர் உள்ளிட்ட இடங்களில் சுமார் 5 மணி நேரம் மின்வெட்டு நீடித்தது.

மழைநீர் வடிகால் பணிகளின்போது பூமிக்கடியில் பதிக்கப்பட்ட மின்கம்பிகள் சேதமடைவதும் சில இடங்களில் திடீர் மின்தடைக்கு காரணமாக இருப்பதாக மின் வாரிய பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஒரு பகுதியில் ஏற்பட்ட பழுது சரி செய்யப்படுவதற்குள் மற்றொரு பகுதியில் மின் தடை ஏற்படும் நிலை இருப்பதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னையைப் போலவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மின்தடை மற்றும் திடீர் மின்வெட்டு தொடர்பாக பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக கிராமப்புறங்களில் மின்விநியோகத்தில் ஏற்படும் தடையால் விவசாய பணிகள் பாதிக்கப்படுவதாகவும், மின்மோட்டார்களை இயக்க முடியாமல் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் சிரமம் ஏற்படுவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.